# தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்

## ஆலோசகர் சேவைகள்

**செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம் (Performance Based Maintenance Contract):**

சாலை பராமரிப்பில் தற்போது உள்ள முறையை மாற்றி நீண்ட கால பராமரிப்பு ஒப்பந்தத்தின் செயல்பாட்டு அடிப்படையில் பணிகளை செய்து முடிக்க, தனியார் துறை மூலம் ஒரே ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட சாலைத்தொகுப்பினை தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் பராமரிக்க, கீழ்கண்ட சாலைகள் முன் மாதிரியாக தேர்வு செய்யப்பட்டு 03.09.2010 அன்று இப்பணிக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்பணிகளை மேற்பார்வையிட ஆலோசகர் 24.01.2011 அன்று நியமிக்கப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது. ஒப்பந்த காலம் ஐந்தாண்டுகள் ஆகும். இத்திட்டத்தின் ஒப்பந்த மதிப்பு ரூ. 48.03 கோடி ஆகும்.

| வ. எண் | மாவட்டம் | சாலையின் பெயர் | மொத்த தூரம் கி.மீ |
|---|---|---|---|
| 1. | சேலம் | ஓமலூர் – மேச்சேரி சாலை – MDR | 14.60 |
| 2. | சேலம் மற்றும் நாமக்கல் | ஓமலூர் – சங்ககிரி – திருச்செங்கோடு –பரமத்தி சாலை (மா.நெ. எண் –86) | 81.00 |
| 3. | சேலம் மற்றும் ஈரோடு | தொப்பூர்–மேட்டூர் – பவானி–ஈரோடு சாலை (பவானி வரை) (மா.நெ. எண் – 20) | 94.00 |
| 4. | சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் | சேலம்–அரூர்–திருப்பத்தூர் – வாணியம்பாடி சாலை (மா.நெ. எண் – 18) | 106.40 |
| | | **மொத்தம்** | **296.00** |

**<u>இரண்டாம் கட்ட செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தம்</u> (Performance Based Maintenance Contract –II PHASE):**

சாலைப் பாதுகாப்பு தணிக்கை **(Road Safety Audit)** திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் முதல் கட்டுமாவடி வரையுள்ள 117.4 கி.மீ, கட்டுமாவடி முதல் இராமநாதபுரம் வரையுள்ள 99.9 கி.மீ மற்றும் இராமநாதபுரம் முதல் தூத்துக்குடி வரையுள்ள 114.67 கி.மீ சாலைகளில் பாதுக்காப்பான பயணத்திற்கு உதவும் வகையில் சந்திப்புகளை மேம்பாடு செய்தல், வேகத்தடைகள் அமைத்தல், எச்சரிக்கை பலகைகள் வைத்தல், தகவல் பலகைகள் வைத்தல் போன்றவற்றிற்கான ஆய்வுகள் இந்திய தொழில் நுட்ப நிறுவனம், சென்னை அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மேலும் அவர்களை கொண்டு, ஆற்காடு முதல் திருவாரூர் வரை மேம்படுத்தப்பட்ட சாலைகளிலும் அவ்வாறே ஆய்வு செய்து அறிக்கை அக்க ஒப்பதம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. இவைகளை உள்ளடக்கி, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேம்பாடு செய்யப்பட்ட 724 கி.மீ நீள சாலையினை இரண்டாம் கட்டமாக செயல்பாட்டு அடிப்படையிலான பராமரிப்பு ஒப்பந்தத்தின் கீழ் பராமரிக்க உலக வங்கியின் ஒப்புதல் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

<u>பொது, தனியார் துறை கூட்டமைப்புத் திட்டம்</u> **(Public Private Partnership Scheme):**

பொது மற்றும் தனியார் துறை கூட்டமைப்பு திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வுகளுக்காக பன்னாட்டு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு, கோயம்புத்தூர் மேற்கு புறவழிச் சாலை, சென்னை வெளிவட்டச் சாலை ஆகியவற்றின் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் கோயம்புத்தூர் மேற்கு புறவழிச் சாலை பணிகளுக்கான நடவடிக்கைகளை பொது அலகின் மூலமும், சென்னை வெளிவட்டச் சாலைப் பணிகளை தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்தினை (TNRDC) நிர்வாக ஒருங்கிணைப்பாளராக (Managing Associate) கொண்டும் தமிழக அரசு செயல்படுத்துகிறது.

பொதுத் துறை, தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின் கீழ் கீழ்காணும் சாலைகளுக்கு நான்குவழிப் பாதைகள் அமைத்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்க ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு ஆய்வுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. இறுதி அறிக்கை பெறப்பட்டவுன் இப்பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ள அரசுக்கு கருத்துரு அனுப்பப்படும்.

| வ. எண் | சாலையின் பெயர் | சாலை கி.மீ | ரூபாய் கோடியில் |
|---|---|---|---|
| 1. | மெட்டூர் – பழங்கானுாத்து–ஒட்டன்சத்திரம்–தாராபுரம்–காங்கேயம்–திருப்பூர் சாலை (SH 37) | 126 கி.மீ | 1110.00 |
| 2. | ஈரோடு –தாராபுரம் சாலை (SH 83A) | 78 கி.மீ. | 377.00 |
| 3. | ஆற்காடு புறவழிச்சாலை | 3.6 கி.மீ | 30.00 |
| 4. | ஈரோடு வெளி வட்ட சாலை பகுதி II | 9.6 கி.மீ | 31.00 |
| 5. | சென்னை வெளிவட்ட சாலை பகுதி –II | 32.3 கி.மீ | 592.00 |

**சாலை முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வு (Strategic Option Study) - II :**

தமிழகத்தில் உள்ள அனைத்து சாலை தொகுப்பிலிருந்து தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அடிப்படையில் 2477 கி.மீ நீளமுள்ள 39 சாலைகள் முன்னுரிமை தேர்வுக்கான ஆய்வுப் பணி மேற்கொள்ள தொழில்நுட்ப கழகம், சென்னை (IIT Madras) அவர்களிடம் ரூ.44.65 லட்சங்கள் மதிப்பில் 01.03.2011 அன்று ஒப்படைக்கப்பட்டு, வரைவு இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. ஆய்வுகளின் இறுதி அறிக்கையின்படி, உலக வங்கியிடமிருந்தும் மற்ற பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதி உதவி பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், தமிழ்நாட்டில் உள்ள சாலை தொகுப்பில் உள்ள மற்ற சாலைகளின் தன்மைகளையும், அதன் போக்குவரத்து செறிவு போன்ற அனைத்து விவரங்களையும் சாலை மேலாண்மை அமைப்பு மூலம் சேகரித்து அவற்றினையும் தொழில்நுட்ப மற்றும் பெருளாதார அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி, மேம்பாடு செய்திட சாலை தொகுப்பின் விவரங்களை சேகரிக்க நவீன கருவிகள் வாங்க ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது. அக்கருவிகளை கொண்டு, தமிழகத்தின் அனைத்து சாலைகளின் நிலைமையை தள ஆய்வு செய்து கணினியில் பதியப்படும். அதன் அடிப்படையில், சாலைகள் தேர்வு செய்யப்பட்டு, ஆண்டு நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப சாலைகள் மேம்பாடு செய்யப்படும்.

## கணினிமயமாக்குதல்

இத்துறையின் பணிகளின் முன்னேற்றத்தினை உடனுக்குடன் ஆய்ந்து பணிகளை சிறப்பாகவும், விரைவாகவும் செய்து முடிக்க இத்துறையின் தலைமைப் பொறியாளர் அலுவலகம் முதல் பிரிவு அலுவலகம் வரை உள்ள அனைத்து அலுவலகங்களுக்கும் 1719 கணினிகள் வழங்கப்பட்டு, எச்.சி.எல், இன்போடெக் (HCL, Infotech)நிறுவனத்தின் மூலம் வாங்கவும் தொடர்ந்து ஆறு ஆண்டுகள் பராமரிக்கவும் ரூ.14.77 கோடிக்கு 15.011.2007 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டு, அனைத்து கணினிகளும் பயன்பாட்டில் உள்ளது.

## நிர்வாக சீரமைப்பு (Institutional Development Strategy)

நெடுஞ்சாலைத்துறையின் பணிகளை சிறப்பாக செயல்படுத்திட பணியாளர்களை தேவைக்கேற்ப மாற்றி அமைத்து இத்துறைக்கென முதன்மை இயக்குநர் நியமிக்கப்பட்டு நிர்வாகம் சீராகவும் சிறப்பாகவும் செயல்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## விபத்து மேலாண்மை அமைப்பு மற்றும் சாலை மேலாண்மை அமைப்பு (RADMS and RMS )

நெடுஞ்சாலைத்துறையின் சாலைகளை மேம்பாடு செய்ய தெரிவு செய்வதற்கு சாலை மேலாண்மை அமைப்பு உருவாக்கப்பட்டு தகவல்கள் சேகரிக்கும் தள ஆய்வு நடைபெற்று வருகிறது. அதன் அடிப்படையில் முன்னுரிமைப்படுத்தி மேம்பாட்டுப் பணிகளுக்கான சாலைகள் தெரிவு செய்யப்படும். நெடுஞ்சாலைத்துறை, போக்குவரத்துத்துறை, காவல் துறை ஆகிய துறைகளின் ஒருங்கிணைப்போடு, நெடுஞ்சாலைகளில் நடக்கும் விபத்துகளைப் பற்றிய தகவல்கள் மூன்று துறைகளின் மூலமும் சேகரிக்கப்பட்டு கணினியில் பதியப்படுகிறது. அத்தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, மேலும் விபத்துக்கள் நடவாதிருக்க வழிமுறைகள் கண்டறியப்படுகிறது அதன்படி சம்பந்தப்பட்ட துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு விபத்துக்கள் நடவாதிருக்க வழி வகை செய்யப்படுகிறது.

**<u>புவியியல் தொடர்பான தகவல் அமைப்பு</u> – (Geographic Information System)**

நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள சாலைத் தொகுப்பின் வரைப் படத்தினை கணினியில் நிறுவி, புவியியல் தொடர்பு மென்பொருள் மூலம் சாலைகளின் தன்மைகளை பகுப்பாய்வு செய்து, முன்னுரிமைப் படுத்தி மேம்பாடு செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கான மென்பொருள் ARC–GIS server ரூ.50 இலட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இம்மென்பொருளை நெடுஞ்சாலைத் துறையின் தேவைக்கேற்ப மாற்றி அமைக்க திருவாளர்கள் PIXEL SOFTEK PVT.LTD Bangalore நிறுவனத்திற்கு ரூ.179.40 இலட்சத்திற்கு ஒப்பந்தம் 29.12.2010 அன்று கையொப்பம் இடப்பட்டு சாலை மேலாண்மை அமைப்பில் உள்ள விவரங்களை கணினி மூலம் இந்திய நில அளவை வரைபடத்தில் இணைத்திடும் பணி நடைபெற்று வருகிறது.

இதன் தொடர்ச்சியாக சாலை விவரங்களை தானியங்கி உபகரணம் மூலம் சேரிக்க தேவையான உபகரணம் வழங்கி தொடர்ந்து மூன்று ஆண்டு காலம் பராமரிக்கவும், துறை பொறியாளர்களுக்கு தள விவரங்களை சேகரிக்க தேவையான பயிற்சிகளை அளிக்கவும் நியூசிலாந்து நாட்டை சார்ந்த டேட்டா கலக்ஷன் (Data Collection) நிறுவனத்துடன் ரூ.6 கோடி மதிப்பிற்கு ஒப்பந்தம் 24.05.2011 அன்று கையொப்பம் இடப்பட்டுள்ளது. இதன் ஒப்பந்த காலம் 53 மாதங்கள் ஆகும்

**<u>சாலைப் பாதுகாப்பு தணிக்கை</u> (Road Safety Audit)**

சாலைப் பாதுகாப்பு தணிக்கை தொடர்பாக உடன்படிக்கை இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT), சென்னையுடன் செய்யப்பட்டு தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் தொகுப்பு 2, 3 மற்றும் 4–இல் மேம்பாடு செய்யப்பட்ட 335 கி.மீ. நீளமுள்ள சாலைகளில் சாலை பாதுகாப்பு மதிப்பீடு செய்தல், சாலைகளின் பாதுகாப்பை ஆய்வு செய்தல், சாலை பாதுகாப்பு குறித்த இன்னல்கள் மற்றும் குறைபாடுகளை கண்டறிந்து அவற்றை களைவதற்கான விரிவான சாலை பாதுகாப்பு அறிக்கை தயார் செய்து அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தொகுப்பு 1ல் மேம்படுத்தப்பட்ட 374 கி.மீ நீள சாலைகளில் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இவ்வறிக்கை பெறப்பட்டவுடன் மொத்தமுள்ள 709 கி.மீ நீள சாலைகளில் சாலைப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள உலக வங்கியின் ஒப்புதல் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**<u>திட்டம் மற்றும் நிதி மேலாண்மை அமைப்பு</u> (Project & Finance Management System):**

சாலை பராமரிப்பு மற்றும் மேம்பாடுத் திட்டங்களின் முன்னேற்றம், செலவினம் ஆகியவற்றுடன் பணியாளர்களின் விவரங்கள் அனைத்தையும் கணினியில் பதிவு செய்து தொடர் கண்காணிப்பில், செயல்பாட்டினை மேம்படுத்த எதுவாக மென்பொருள் தயாரிக்கும் பணிக்கு திருவாளர்கள் சி.எம்.சி லிமிடெட், சென்னை அவர்களுக்கு ரூ.296 இலட்சம் மதிப்பிற்கான ஒப்பந்தம் 12.07.2010 அன்று கையொப்பமிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது. இதற்கான ஒப்பந்த காலம் 10 மாதங்கள் ஆகும்.